
# பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும்





இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

# பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும்

பதிப்பாசிரியர்கள்

பேராசிரியர் சி. பத்மநாதன்

க. இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

2012

நூலின் பெயர் :

பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும்

பதிப்பாசிரியர்கள் :

பேராசிரியர் சி. பத்மநாதன்

க. இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

முதற் பதிப்பு : 2012

வெளியீடு :

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

248, 1/1, காலி வீதி, கொழும்பு - 04,

இலங்கை

அச்சு :

யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

48 B, புளூமென்டால் வீதி, கொழும்பு - 13

தொ. பே. : 2330195

பக்கங்கள் : XXXII + 672

பிரதிகள் : 500

அளவு : 1/8

கடதாசி : 80 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள்

விலை : ரூபா 500 /=

Title:

British Colonialism and Modernization

Editor:

Prof. S. Pathmanathan

K. Raguparan

Dr. S. Pirasanthan

First Edition : 2012

Published by:

Dept. of Hindu Religious & Cultural Affairs

248, 1/1, Galle Road, Colombo - 04,

Sri Lanka

Printers :

Unie Arts (Pvt) Ltd.,

48 B, Bloemendhal Road, Colombo 13.

Tel: 2330195

No of Pages : XXXII + 672

No of Copies : 500

Size : 1/ 8

Paper Used : 80 GSM White Paper

Price :Rs. 500 /=

ISBN - 978-955-9233-23-7

# இந்தியத் தாந்திரீகம் பற்றிய புரிதலில் சேர் ஜோன் வூட்றொவ்

ச. முகுந்தன்

தந்திரம் என்ற சொல்லினைப் பலவாறு கருத்துவிளக்கம் செய்வர்.

1) தத்துவம் + மந்திரம் என்ற இரண்டு சொல்லிணைகளின் வழியே பிறந்த பதமே தந்திரம் என்பது. இதில்

தத்துவம் : பிரபஞ்ச அறிவு, விஞ்ஞானம், இயற்கை பற்றிய ஆய்வு.

மந்திரம் : மறைமொழிகள் அவற்றின் அதிர்வலைகள் பற்றியது.

மனிதன் தான் ஈடேற்றமடையும் நோக்குடன் அமைத்துக் கொண்ட இயற்கையுடன் தொடர்புடைய ஒருவகைப் பிரயோக அறிவியலாக இதனைக் கருதுவர்.[1]

2) "தந்திர" என்ற சமஸ்கிருதச் சொல்லடியாக இதற்கு கோட்பாடு, நெசவு செய்தல் என்றும் பொருளுண்டு. மேலும்,

தனோதி → நீட்சி , விரிவு

த்ரயதி → விடுதலை

என்ற வினையடிகளின் அடிப்படையில் ஆன்ம விடுதலையின் பொருட்டு நிகழ்த்தப்படுகின்ற விரிவான சடங்குகளின் தொகுதி நிலை என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. [2]

3. தந்திரம் → தன் + திரம்
அ + து → தன் : விருத்திசெய்தல்
திரம் : இனம்

அந்த வகையில் மானிடவியல் நோக்கில் இனவிருத்தியுடன் தொடர்புடைய ஒருவகை வளச்சடங்கே தந்திரம் என்றும் கருத்துரைப்பர்.[3] ஆயினும் உண்மையில் இதனைப் பழங்குடிகளின் மழைச்சடங்கு, வளச்சடங்கு போன்ற சட்டகங்களுக்குள் பொருத்திப் புரிந்துகொள்ள முயல்வது இந்தியத் தாந்திரீக மரபின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள உதவாது.

## தாந்திரீகத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள்

- பிரபஞ்சத்தின் நுண்வடிவமே மனித உடல்.
- உடலில் உறைந்துள்ள சக்திகளைச் சாதனை செய்து வளர்ப்பதன் மூலம் புற உலகில் வெற்றிபெற முடியும்.
- பிரபஞ்ச இயற்கையை உணர்கின்றபோது உயிரியற்கையின் இரகசியம் அவிழ்க்கப்படும்.
- பிரபஞ்சத்தின் ஆற்றலைப் பெண்ணாக உருவகித்தல்.
- ஒவ்வொரு தனிமனிதனும் தனக்குள் உறங்குநிலையில் இருக்கும் அப்பெண்ஆற்றலை (பிரபஞ்சத்தின் ஆற்றலை) கண்டுணர முயலுதல்.
- குண்டலினியோகம், யந்திரஉபாசனை ஆகியன இதற்குரிய முக்கிய சாதனைகளாகக் கருதப்படுகின்றன.
- பண்டைய இந்தியாவில் மருத்துவம், இரசாயனம், கேத்திரகணிதம், வானசாஸ்திரம் போன்ற அறிவியற் புலங்களின் விருத்திக்குத் தாந்திரீகம் ஒரு முக்கிய காரணியாகத் தொழிற்பட்டுள்ளது.

தாந்திரீகம் சுட்டும் ஆத்மீக விடுதலையானது உடலைப் புறக்கணிப்பதாக அன்றி அதனைப் பூசிப்பதற்குரிய சாதனமாக ஆக்கிக் கொள்வதன் மூலம் சாத்தியப்படும். ஆத்மீக விடுதலை என்பது பேராற்றல் / பேரியற்கையுடன் சிற்றியற்கை ஆகிய உடல் மாறாத அதிர்வலைகளால் இணைந்திருப்பதன் மூலம் பெறப்படுவதாகும்.

## இந்தியச் சமய மரபுகளில் தாந்திரீகம்

சாக்தம் , சைவம் , வைணவம், வஜ்ரயான பௌத்தம், சித்தர் ரசவாதம், காணபத்தியம் ஆகிய நெறிகளுக்குள் தாந்திரீகச் செல்வாக்கு விரவியுள்ளது. மொஹஞ்சதாரோ ஹரப்பா அழிபாடுகளிலும் அதர்வ வேதத்திலும் இந்தியத் தாந்திரீகத்தின் ஆரம்ப நிலைகளை அவதானிக்க முடிகிறது.

எவ்வாறாயினும் தாந்தீரிகத்துக்குரிய மூல நூல்கள் குப்தர் காலத்திலேயே முதன் முதலில் எழுச்சி பெறத்தொடங்கின. இந்திய தாந்திரீக வரலாற்றில் கி.பி. 4-9 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலேயே அதிகளவிலான தந்திரசாஸ்திரங்கள் தோற்றம் பெற்றன.[4]

## தாந்திரீகப் பிரிவுகள்

1) இடதுகை மார்க்கம்
2) வலதுகை மார்க்கம்
3) கௌல மார்க்கம்
4) குலாகம மார்க்கம்[5]

என வழிபாட்டு முறையின் அடிப்படையில் நான்கு பிரிவுகள் உள்ளன. இவற்றுள் இடதுகை மார்க்கத்தில் காணப்பட்ட சில குறைபாடுகளாலும் அவற்றைப் பிற்கால மக்கள் தத்தமது விருப்பங்களுக்கேற்றவாறு கற்பிதஞ்செய்து கொண்ட முறைமைகளாலும் தாந்திரீகம் பற்றிய தவறான சமூக எண்ணக்கரு இந்திய சமுதாயத்தில் வேரூன்றலாயிற்று. மதம் பரப்ப வந்த கிறிஸ்தவ மிசனறிமாரால் இந்துசமயத்தின் பெயரால் இந்திய சமூகத்தில் நிலவுகின்ற குறைபாடுகளில் ஒன்றாகத் தாந்திரீகம் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால்

தாந்திரீகநெறி பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தோன்றிய நவீன இந்துசமய சீர்திருத்த இயக்கங்களின் கண்டனங்களுக்கும் உள்ளானது.

## சேர் ஜோன் வூட் றொவ்

பிரித்தானிய தேசத்தவரான சேர் ஜோன் வூட்றொவ் 1865ஆம் ஆண்டு மார்கழி மாதம் 15ஆம் திகதி ஜேம்ஸ்வூட்றொவ், புளோரன்ஸ் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் குடியியல் சட்டத்தில் பட்டம் பெற்றார்.

நீதி -சட்டத்துறையில் உயர்பதவிகளை வகித்த இவர் வங்காளத்தில் பணியாற்றும்படி நேர்ந்தது. 1887- 1904 வரையிலான காலகட்டத்தில் கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகவும் கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறைப் பேராசிரியராகவும் பணிபுரிந்த இவர் 1904 முதல் 1915 வரையிலான காலப்பகுதியில் நீதியரசராகவும் பதவி வகித்துள்ளார்.[6]

18ஆம் 19ஆம் நூற்றாண்டிடுகளில் நிகழ்ந்த இந்துசமய மறுமலர்ச்சியும் நவீன சீர்திருத்த இயக்கங்களின் தோற்றமும் வங்காளத்தை மையப்படுத்தி அமைந்தமை யாவரும் அறிந்த விடயமாகும். ஆசிய கழகத்தின் (Asiatic Society) ஸ்தாபிதம், மக்ஸ்மூலர், மக்டொனால்ட் போன்ற மேலைத்தேய அறிஞர்களின் ஆய்வுப்பணிகள் போன்றன வங்காளத்தில் பணிபுரிந்த சேர் ஜோன்வூட்றொவ் போன்றோரையும் இப்புலத்துள் நாட்டங்கொள்ள வைத்தன.

ஓய்வு நேரங்களில் சமஸ்கிருதம், இந்துதத்துவம் ஆகியவற்றை முறைப்படி கற்றுக்கொண்ட சேர் ஜோன்வூட்றொவ் ஏனைய மேலைத்தேய ஆய்வாளர்களைப் போலன்றித் “தாந்தீரிகம்” தொடர்பாகத் தனது கவனத்தைச் செலுத்தினார்.

“வங்காள மறுமலர்ச்சி” தாந்திரிகத்தினை விமர்சித்துப் புறந்தள்ளியது. நவீன சீர்திருத்த சிந்தனையாளர்கள் எவரும் தாந்திரீகத்தின் உள்ளார்ந்த தத்துவார்த்தத்தினைக் கட்டவிழ்க்க முன்வரவில்லை.இராஜாராம் மோகன்ராய் போன்றவர்கள் உலகியல் மோகத்தினால் இந்து மதத்தின் மீது நிகழ்த்தப்பட்ட

பாவகாரியமாக இதனை விமர்சித்தனர். தந்திரசாதகராகிய இராமகிருஷ்ணபரமஹம்சரின் நேரடிச் சீடரான சுவாமி விவேகானந்தரால் கூடக் கவனத்திற் கொள்ளப்படாதிருந்த தாந்தீரிக மரபு இந்து சமய வரலாற்றுடன் பல நூற்றாண்டுகாலத் தொடர்புடையதாகும்.சாக்தம், சைவம், வைணவம் ஆகிய இந்து சமயப் பிரிவுகளில் மட்டுமின்றி சித்தர் இரசவாதத்திலும் பௌத்தப்பிரிவாகிய வஜ்ரயானத்திலும் தாந்திரீகம் விரவி யுள்ளது.இம்மரபை வங்காள மறுமலர்ச்சி புறந்தள்ள முயன்றமை நியாயமானதா என்கிற கேள்வி ஒரு நியாயவாதி என்ற வகையில் ஜோன் வூட்றோவ்வை இத்துறை நோக்கி ஆர்வங்கொள்ள வைத்தது. நீதிபதி என்றமுறையில் அவரிடம் வந்த வழக்கொன்றும் இதற்கான உடனடித் தூண்டலை ஏற்படுத்தியது. இவர் "Arthur Avalon" என்ற புனைபெயரில் நுழைந்துகொண்டு தனது ஆய்வுப்பணியைத் தொடங்கினார்.

தாந்திரீகம் தொடர்பான இவருடைய ஆக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) ஆய்வு நூல்கள்
2) குறிப்புரையுடன் அமைந்த மூலபாட மொழிபெயர்ப்புக்கள்
3) தாந்திரீகந் தழுவிய பிறநூல்கள்

## ஆய்வு நூல்கள்:

- Introduction to Tantra Sastra
- Shakthi and Shakta (2 Vol)
- Principles of Tantra (2 Vol)
- The serpent Power (குண்டலினி சக்தி)
- Garland of Letters (வர்ணமாலா என்ற தாந்திரீகப் பனுவலைத் தழுவியது.)

## குறிப்புரையுடன் அமைந்த மூலபாட மொழிபெயர்ப்புக்கள்:

- Kamakala Vilasa
- Maha Nirvana Tantra

வேதங்கள் மறைஞானிகள் கண்ட ஆத்மீக அனுபவத்தின் வெளிப்பாடுகளே ஆகும். தாந்திரீக சாதகனோ பிறருடைய ஆத்ம அனுபவத்தினை வேண்டுவதில்லை. அவனுக்கு யார் துணையும் அவசியமில்லை. நேரடியாகவே அந்தப் பரம்பொருளிடம் தொடர்புற வல்லவனுக்கு வேத உபாசனையால் என்ன பயன்?

*"I spend not my time in reading the Vedas"*

*(The Vedas, which he has already studied, are the record of the standard Spiritual experience of others, He seeks Spiritual experience of others, He seeks now to have that experience himself directly what is the use of merely reading about it?)* [9]

பௌதீக அதீதம் பற்றியும் மோட்சம் பற்றியும் மறுமை பற்றியும் அதிகம் அலட்டிக் கொள்கின்ற கோட்பாடுகளை தாந்திரீகம் கண்டுகொள்வதில்லை. ஒவ்வொரு சாதாரண மனிதனும் தனது யாதார்த்த உலகத்தில் வாழ்ந்து ஈடேற்றமடையக் கூடிய முறையிலேயே பரம்பொருளால் சிருட்டிக்கப் படுகிறான். ஆனால் இறப்பைப் பற்றிய அச்சம் அவனை இயற்கையதீதக் கனவுகளில் மூழ்கடிக்கின்றது என விமர்ச்சிக்கின்ற வூட்றொவ் யதார்த்த உலக அனுபவங்களைப் புறந்தள்ளிவிட்டு எத்தகையதொரு ஆத்ம ஈடேற்றத்தினையும் அடையமுடியாது என்கிறார். இதற்காக விஸ்வசார தந்திரத்திலிருந்து அவர் எடுத்தாள்கின்ற மேற்கோள் உலகப் பிரசித்த மானதாகும்.

*"what is here is elsewhere*
*what is not here is nowhere*
*Experience of the seen is the experience of the*
*un seen in time and Space"* [10]

இந்துக்களின் பலதெய்வக் கோட்பாடு பற்றிய விமர்சனங்கள் அதிக முக்கியத்துவப்படுத்தப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டுகாலச் சமூகச் சூழலில் தாந்திரீகத்தின் தளத்திலிருந்து வூட்றொவ் வழங்கிய பதிலுரைகள் கவனத்திற்குரியன.

“இந்து தாந்திரீகர்கள் சூரியன் கணபதி, விஸ்ணு, சிவன், சக்தி என 5 பிரிவுகளைக் கொண்டிருந்த போதும் உண்மையில் இவை பேதங்களல்ல ஒரே ஒரு சர்வவல்லமை படைத்த ஆற்றலின் வேறுபட்ட வடிவங்களே”

சம்மோகன தந்திரத்தில் இடம்பெற்றுள்ள பாடப்பகுதி யொன்றையும் இதற்கு ஆதாரமாக வூட்றொவ் எடுத்தாண்டுள்ளார்.

“He is fool, who sees any difference between Rama and shiva What matters the name”[11]

*Sammohana Tantra - 40*

தேகவாதத்தினை மட்டுமே தந்திரமார்க்கம் வெளிப்படுத்தியுள்ளது என்பதனை வூட்றொவ் நிராகரிக்கிறார். யோக அனுபவமானது போக அனுபவத்தை முழுமையாக மறுக்கின்ற ஒன்றாகவே இந்து அறிஞர்கள் பலர் கருதி வந்துள்ளனர். இதனையும் அவர் மறுதலிக்கிறார். புறவயமாகக் குறைபாடுகளுடன் நுகரப்படுகின்ற போக அனுபவத்தை முழுமையானதாக்கி அதனை அகவயமாக அனுபவிக்கவல்ல சாதனமாக யோகம் அமைவதாகச் சுட்டிக்காட்டுகின்ற வூட்றொவ் இவை இரண்டும் வெவ்வேறு துருவங்களல்ல என்பதனை தாந்திரீக மூலங்களின் துணை கொண்டு நிறுவமுற்படுகிறார்.

*“ It is said that where there is yoga there is no Bhoga (enjoyment) but in kaula teaching, yoga and the world itself becomes the seat of Liberation”*

எனத் தனது நூலில் குறிப்பிட்டுள்ள வூட்றொவ் இதற்கு கௌலநெறிக்குரிய புகழ்பெற்ற சுலோகத்தினைச் சான்று காட்டியுள்ளார்.

*“Yogo bhogayate mokshayate , mokshayate samsarah”*[12]
(யோகோ போகயதி மோக்ஷயதி சம்சாரக)

“அண்டத்திலுள்ளது பிண்டத்தில் உண்டு” என்பது சித்தர் மரபில் வழங்குகின்ற முக்கியமானதொரு கருத்தாக்கமாகும். மனித உடலைச்

சிற்றண்டம் எனவும் அது பேரண்டத்தின் நியமமாதிரி என்றும் சித்தர்மரபு வலியுறுத்துகின்றது.

இதனையே தாந்திரீகமரபும் வெளிப்படுத்தி நிற்கிறது. அடிப்படையில் சித்தர்மரபு தாந்திரிக மரபின் அனேக பரிமாணங்களைத் தழுவியதாகும்.(உதாரணம் இரசவாதச் சித்தர்மரபு) மகாநிர்வாண தந்திரத்தில் இடம் பெற்றுள்ள

*"Yadihasti tad anyatra, yanneshasti na tat kavacit"*

என்ற சுலோகத்தினை அடிப்படையாகக் வைத்து இதனை வூட்றொவ் விளக்கினார். அந்த வகையில்,

*"The life of the individual is an expression of the same laws which govern the Universe"*

என ஆரம்பித்து வூட்றொவ் அளிக்கின்ற விளக்கம் நயக்கற்பாலது.[13]

பிரபஞ்சத்தின் உற்பத்தி தொடர்பாக தாந்திரீக அடிப்படையில் வூட்றொவ் அளிக்கும் விளக்கமானது நவீன அண்டவியல் ஆய்வுகளுக்கு முன்னோடியானதாகும்.

*"சக்தியின் சம நிலையானது பேரதிர்வு ஒன்றினால் சிதைக்கப்படும் போது அண்டம் உருவானது. இந்த அதிர்வையே "ஸ்பந்தன" எனத் தாந்திரீக நூல்கள் குறிப்பிடுகின்றன. அந்த முதல் அதிர்வே ஓம் எனும் மந்திரமாகும்"*[14]

எனத் தனது "Garland of Letters" என்ற நூலில் வூட்றொவ் குறிப்பிட்டுள்ளார்.

அண்டத்தின் தோற்றம் பற்றிய அறிவியல் ஆய்வுகள் இற்றைவரை கருதுகோள் நிலையிலேயே உள்ளன. அவற்றுள் முதன்மையானதாக கருதப்படுகின்ற பெருவெடிப்புக் கொள்கையுடன் (The Big Bang Theory) வூட்றொவ் குறிப்பிடும் கருத்துக்கள் அதிகமாக ஒத்திசைவுற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தாந்திரீகம் தொடர்பான வூட்றொவ்வின் ஆய்வுநூல்களில் முதன்மையான இரு படைப்புக்களாகத் திகழ்பவை

1) Introduction to Tantra Sastra"
2) Shakthi and Shakta

ஆகிய பனுவல்களாகும்.

"Introduction to Tantra Sastra" என்ற இந்நூல் 1913இல் முதற்பதிப்பாக வெளிவந்தது. இதில் "கைலாசபர்வதம்" முதற்கொண்டு "சித்தி" வரையிலாக இருபத்தொரு அத்தியாயங்கள் உள்ளன.

தாந்திரீகத்திற்குரிய தெய்வீக வரலாறு, சமய ஐதீகங்கள், என்பன தொடர்பாக முதல் இரண்டு அத்தியாயங்கள் பேசுகின்றன. இந்து நாகரிக வரலாற்றில் தாந்திரீகத்தின் தொன்மை, வரலாறு பற்றி அறிய உதவுகின்ற ஒருவருக்கான ஆரம்ப பரிமாணத்தை இவ்வத்தியாயங்கள் தந்துள்ளன.

மூன்றாம் அத்தியாயம் முதற்கொண்டு ஏழாம் அத்தியாயம் வரையில் பிரபஞ்ச உற்பத்தி பற்றிய விரிவான கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. எட்டாவது அத்தியாயம் "Macrocosm and Microcosm" என்ற வகையில் பேரண்ட(அண்டம்) சிற்றண்ட (பிண்டம்) இணைப்பை விவரிக்கின்றது.

பதினோராம் அத்தியாயம் மனித உடலின் அமைப்புத் தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளது. பன்னிரெண்டாம் அத்தியாயம் பசு,வீரம், திவ்யம் எனும் மூவகைப் பா(B)வங்களையுடைய மனிதர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. 13-21 ஆம் அத்தியாயங்கள் ஆன்ம விடுதலை தொடர்பாக ஆராய்ந்துள்ளன. இவற்றுள் குறிப்பாக 21ஆம் அத்தியாயத்தில் "அட்டமாசித்திகள்" பற்றிய விரிவான குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூலில் இடம்பெற்றுள்ள மனித உடற்கூற்றியல் தொடர்பான விளக்கங்கள் இந்து ஆயுர்வேத – சித்த மருத்துவப் பின்புலத்தில் நுணுகி ஆராயப்பட வேண்டியவையாகும். மேலும் மனித உடலை பரம்பொருள் உறைகின்ற பட்டினமாக எடுத்தாள்கின்ற தாந்திரீக மரபினை "தத்துவம் அஸி" என்கிற உபநிடத மகாவாக்கியத்துடன் தொடர்புபடுத்துகின்ற சேர் ஜோன்



10

வூட்றொவ் தேகவாதம் - வேதாந்தம் என்ற இரண்டு பெரிய முரண்பட்ட தளங்களினை தன்னுடைய புத்திநுட்பமான எடுத்துகாட்டுக்களின் மூலம் ஒன்றிணைக்கும் முயற்சியினை இந்நூலினூடாக மேற்கொண்டமையை அவதானிக்க முடிகின்றது.

தனது கருத்தியலை நியாயப்படுத்துவதற்காக மகாநிர்வாண தந்திரம் , சத்சக்கரநிரூபணம், நிருத்திரதந்திரா, சம்மோஹன தந்திரா, யோஹினிஹ்ருதயம் ஆகிய தந்திரசாஸ்திர மூலங்கள் இவரால் பொருத்தமுறத் துணைக் கொள்ளப்பட்டுள்ளன.

"Shakthi and Shakta" என்ற நூல்

1918 இல் வெளிவந்தது. இரண்டு பாகங்களாக அமைந்த இது 30 அத்தியாயங்களைக் கொண்டதாகும்.

பொதுவாகத் தாந்திரீக மரபினை "பெரிய மரபு" எனக் கருதப்படுகின்ற நெறிமுறைகளுக்குப் புறம்பான "இடதுகை" மரபாக நோக்குகின்ற வழக்கம் எம்மவரிடையில் உள்ளது. இந்நூலில் மூன்றாம் நான்காம் அத்தியாயங்களில் வூட்றொவ் இத்தகையதோர் முற்கற்பிதத்தினைத் தக்க ஆதாரங்களுடன் தவிடுபொடியாக்குகிறார்.

தாந்தீரிக மரபின் அடிப்படைகளை வைதீகமரபின் மூலங்களினூடாக வெளிக்கொணர்கின்ற வூட்றொவ் இந்தியத் தொல்குடிகளின் தூய அறிவு சார்ந்த ஆத்மீக சாதனை முறைமையாகத் தாந்திரீகத்தினைப் பிரகடனப்படுத்துகிறார்

*"Tantra as the culmination of all Indian thought. most radical form of spirituality and the archaic heart of aboriginal India"*[15]

இந்தியாவுக்கு அப்பால் கீழைத்தேய மரபில் தாந்திரீக மரபின் செல்நெறிகளை ஓர் செம்மையான ஒப்பாய்வுக்கு உட்படுத்தும் வகையில் இந்நூலின் 9-11 ஆம் அத்தியாயங்கள் அமைந்துள்ளன. இந்நூலின் 22 ஆம் அத்தியாயமானது "Vedanta and Tantra Shastra" என்ற தலைப்பில்

அமைந்துள்ளது.இது தாந்திரீகக் கோட்பாடுகளை வேதாந்த மெய்யியலுடன் தொடர்புபடுத்துவதாயுள்ளது.

*"yet Woodroffe was also an apologist, seeming to have bent over backward to defend the Tartars against their many critics and to prove, That they represent noble, pure and ethical philosophical system in basic accord with the Vedas and Vedanta."* [16]

என T.M.P.மகாதேவன் குறிப்பிடுவதற்கு இதுவே காரணமாயிற்று.

## முடிவுரை

சேர்ஜோன் வூட்றொவ் தனது ஆய்வுப்புலமையின் மூலமாகத் தாந்திரீக மரபின் அறியப்படாத பல பரிமாணங்களை நவீன ஆய்வுலகிற்கு வெளிக்கொணர்ந்து காட்டினார்.இந்தியத் தாந்திரிகத்தினை திட்டமான வரலாற்றுத்தொடர்ச்சியுள்ள நெறியாக அடையாளங்காட்டினார். வைதீகக்கிரியைமரபு, வேதாதந்த மெய்யியல் மரபு என்பவற்றுடன் தாந்திரீக மூலங்களைத் தொடர்புபடுத்தி ஆராய்ந்ததன் விளைவாக நவீன இந்து சமூகப்புலத்தில் தாந்திரீகம் பற்றிப் புனையப்பட்டிருந்த முற்கற்பிதங்களுக்கு முற்றுப்புள்ளி இட்டார்.சீனா - தாவோயிசம், தீபெத்-தாந்திரீகமரபு என்பவற்றுடன் இந்தியத் தாந்திரீக மரபினை ஒப்பாய்வுக்குட்படுத்தியதன் விளைவாகத் தாந்திரீகம் தொடர்பான ஆய்வு வீச்செல்லையினை மேலும் அகலப்படுத்தினார்.சமகால அறிவியற் கருத்தோட்டங்களுடன் இசைவுற்றுச் செல்லக்கூடிய வகையில் தாந்திரீகம் முன்னிறுத்தப்படுவதற்கும் Juliusu Evola, Heinrich Zimmer, Mircea Eliade, Giuseppe Tucci, Ageahndananda Bharathi போன்ற ஆய்வாளர்களால் இதுஒரு தனித்த ஆய்வுப்புலமாகப் பிற்காலத்தில் தொடரப்படுவதற்கும் இவரே ஆதிகாரணமாக விளங்கினார்.

## அடிக்குறிப்புகள்:


1. White, David Gordon (ed.) (2000), **Tantra in Practice,** Princeton University Press. p. 16.
2. Einoo, Shingo (ed.) (2009), **Genesis and Development of Tantrism,** University of Tokyo. p. 45.
3. தேவி பிரசாந் சட்டோபாத்யாய, சவுத் விஷ ப.76 **உலோகாயதம், (1959)**
4. Einoo, Shingo (ed.) (2009),opcit,p.45
5. Woodroffe J, 1974,**The Secrets of Tantric and Shaktic Yoga**, Dover Publications, ,p.313.
6. Taylor, Kathleen (2001). **Sir John Woodroffe, Tantra and Bengal: 'an Indian soul in a European body?'.** SOAS London studies on south Asia. Illustrated edition. Routledge p.p.25-27
7. http://www.colorado.edu/ReligiousStudies/TheStrip/features/thesis/academics/avalon/wood1.html Woodroffe, John, 1910, **Shakti and Shakta**,Forgotten Books, Chap. 2
9. **Ibid.**
10. **Hymns to the Goddess**, Translated by John George Woodroffe, Ellen Elizabeth (Grimson) Woodroffe, 1952Forgotten Books, p.34
11. Woodroffe John, 1910, Ibid.
12 Woodroffe John, 1980, **Introduction to Thantra Shastra**, Ganesh&Company, Madras.p.42
13. Woodroffe, John, (2007). **Mahanirvana Tantra.** NuVision Publications.
14. Woodroffe., John, 1974, **The Garland of Letters. Studies in the Mantra Sastra** ,Ganesh and Company Madras pp22-23.
15. Woodroffe, John, 1980, opcit.p.76.
16. T.M.P. Mahadevan, foreword to; Arthur Avalon, Garland of Letters(6th ed.) 1974, Ganesh and Company, Madras.